**சார்பு நீதிமன்றம், கீரனூர்**

**அ.வ.எண். 80/2021**

**Deposition of witness of Defendant – D.W.1 (அஞ்சம்மாள்)**

**18.02.2026**

**பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி அஞ்சம்மாள் என்பவரிடம் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வினோத், உதவியாளர் என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வழக்கு வாதிகளை தெரியுமா என்றால் தெரியாது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். எந்த சர்வே எண் சொத்திற்கு எதிர்கட்சி செய்து வருகிறேன் என்றால் சர்வே எண் 190/1G சொத்திற்கு எதிர்கட்சி செய்கிறேன். அந்த சொத்தின் விஸ்தீரணம் 11 செண்ட் ஆகும்.

2. அந்த சொத்தை யாரிடம் இருந்து யார் கிரையம் பெற்றது என்றால் கணபதியிடம் இருந்து ராமு கிரையம் பெற்றுள்ளார். கணபதி பெயரில் மேற்படி சொத்து இருந்தது என்பதற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த சொத்து கணபதியின் தகப்பனார் முருகன் பெயரில் இருந்தது என்றும், கணபதி பெயரில் இருந்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனக்கு எழுத படிக்க தெரியும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கணபதியின் தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வரும் சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட சொத்து பிரிவினை இல்லாத பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்து என்றும், அதில் இதர வாரிசுகளை மறைத்து கணபதியிடம் மட்டும் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல.

4. எனக்கு திருமணமாகி 24 வருடம் ஆகிறது. பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்பட்ட சமயத்தில் நான் திருமணமாகி சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல, போட்டுள்ளேன். அந்த சொத்து தற்போது ரெங்கன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. அந்த சொத்தை பற்றிய முழு விவரமும் ரெங்கனுக்கு தான் தெரியும் என்றால் சரிதான்.

5. பொது குடும்ப பாகம் பிரியாத சொத்தை கிரையம் வாங்கியுள்ளதால் அந்த கிரையம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் எதிரி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

S/d – C.Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி, கீரனூர்.